# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.19/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 3 (LW4) |
| Name : | தம்பிதுரை |
| Father's/Husband Name: | |
| Village : | |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.01.2026

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி முருகன் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

(i) பிம்பலூர் காமட்சி அம்மன் கோவில் அருகே மணல் திருட்டு தொடர்பாக வி. களத்தூர் போலிசார் விசாரித்தார்கள் என்றால் தெரியாது. நான் போலிசார் விசாரணையில் 11.07.2022 அன்று அதிகாலை 5.30 மணியளவில் பிம்பலூர் காமட்சி அம்மன் கோவில் அருகே சென்றதாகவும், அப்போது பிம்பலூர் கிராம நிர்வாக அலுவலர் சுதா என்பவர் அந்த இடத்தில் மகேந்திரா பிக்அப் வாகனத்தில் சுய ஆதயம் அடைய வேண்டி ஆஜர் எதிரி வெள்ளாற்றில் மணல் திருடியதாக அந்த வாகனத்தை கிராம

நிர்வாக அலுவலர் கைப்பற்றினார் என்றும் வாகனத்தில் 10 மூட்டை மணல் இருந்தாகவும் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது உண்மை சங்கதிகளை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை :** இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

Calendar Case No: CC.19/2023

DEPOSITION OF WITNESS for Prosecution அ.சா.4 (LW5)

Name : கருணாநிதி

Father's/Husband Name:

Village :

Taluk : வேப்பந்தட்டை

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.01.2026

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி முருகன் ஆஜர்)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காட்டப்டும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு பிம்பலூர் காமாட்சி அம்மன் கோவில் அருகே வெள்ளாற்றில் மணல் திருடியது தொடர்பாக வி.களத்தூர் போலிசார் விசாரித்தார்கள். போலிசார் படம் வரைந்தும், விசாரித்தும் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் கணேசன் என்பவரும் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்பட்ட பார்வை மகஜரில் தான் நான் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) நான் கையெழுத்துயிட்ட பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் கையெழுத்திட்ட இடமான பிம்பலூர் காமாட்சி அம்மன் கோவிலுக்கும் எனது வீட்டிற்கும் இடையே 3 1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் நான்

போலிசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.19/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.5 (LW6) |
| Name : | கணேசன் |
| Father's/Husband Name: | |
| Village : | |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.01.2026

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி முருகன்  ஆஜர்)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் ஐடிஐ படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு பிம்பலூர் காமாட்சி அம்மன் கோவில் அருகே வெள்ளாற்றில் மணல் திருடியது தொடர்பாக வி.களத்தூர் போலிசார் விசாரித்தார்கள். போலிசார் படம் வரைந்தும், விசாரித்தும் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் கருணாநிதி என்பவரும் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்பட்ட பார்வை மகஜரில் தான் நான் கையொப்பம் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) நான் கையெழுத்திட்ட இடமான பிம்பலூர் காமாட்சி அம்மன் கோவிலுக்கும் எனது வீட்டிற்கும் இடையே 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் கையெழுத்துயிட்ட பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று படித்து காட்டினார்களா என்றால் தெரியாது

மேப் போட்டது தொடர்பாக எழுதியிருந்தார்கள். நான் பாண்டகபாடி ஊராட்சி மன்ற துணை தலைவராக சம்பவ சமயத்தில் இருந்தேன் என்றால் சரிதான். நான் துணைதலைவர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிடடு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**